**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 20.11.2024</u>**

**OS.49/2014**

**பி.வா.சா. 1, ஜெயக்கொடி ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. 7,9,10 பிரதிவாதிகள் நீதிமன்றத்திற்கு வருவதில்லை. 11ம் பிரதிவாதி 8ம் பிரதிவாதியின் கணவர் ஆவார். 4,5 பிரதிவாதிகள் நீதிமன்றத்திற்கு எப்போதும் வருவதில்லை. 9ம் பிரதிவாதி சிவக்குமார் என்பவர் 5ம் பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான். 4,5 பிரதிவாதிகள் வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்தவில்லை. பி.வா.சா.ஆ.4 ல் சின்னசாமி சென்னையனுக்கு எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. சென்னையன் சின்னசாமியிடம் எவ்வளவு ரூபாய் விலை பேசி எவ்வளவு நிலம் எப்படி வாங்கினார் என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.4 ஐ நான் ஒப்படைக்கவில்லை. பி.வா.சா.ஆ.5 சென்னையைன் சிவக்குமாருக்கு கிரையம் செய்த விவரம் எனக்கு தெரியும். எவ்வாறு விலை பேசி வாங்கினார் என்ற விவரம் நான் வேலைக்காக வெளியூர் சென்று விட்டதால் எனக்கு தெரியாது.

2. பி.வா.சா.ஆ.5 ஐ நான் ஒப்படைக்கவில்லை. 10 பிரதிவாதி சிவா எனது மகன். 10ம் பிரதிவாதி சிவாவிற்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை ஆனால் என்னுடன் வருவார். சின்னம்மாள் பேரில் பாப்பிரெட்டிப்பட்டி அம்மாபாளையத்தில் நிலம் உள்ளது. எனது அப்பா விலைக்கு வாங்கி கொடுத்தது. பார்வதிக்கு நிலம் இல்லை அதற்காக பணம் பெற்றுக்கொண்டார். பணம் எனது தகப்பனார் கொடுத்தார். அது 50 வருடங்களுக்கு முன் கொடுத்தது எவ்வளவு என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஏற்பட்ட சமயத்தில் பார்வதி, சின்னம்மாள் இருவரும் இருந்து கையொப்பம் செய்தார்கள். எனக்கு படிக்க தெரியாது. சின்னசாமி, நான், சுப்பிரமணி எனது மகன் சிவா, எனது சகோதரிகள் ஆகியோர் பி.வா.சா.ஆ.1 ல் கையொப்பம் செய்தோம். பத்திரத்தை எழுதியவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. சின்னசாமி விவசாயம் செய்யவில்லை, சாராயம் விற்றிருக்கலாம். சின்னசாமி மளிகை கடை போல் கடை வைத்திருக்கிறார். சின்னசாமி அரூர் கச்சேரி மேடு, கால்நடை மருத்துவமனை அருகே 10 வருடங்களாக கடை வைத்துள்ளார் என்றால் இல்லை 5 வருடங்களாக வைத்துள்ளார். நான் வெளியூருக்கு வேலைக்கு சென்று விட்டால் சின்னசாமி என்ன வேலை செய்தார் என்று எனக்கு தெரியாது. சாராயம் குடிப்பாரா என்றால் கிடையாது.

அவர் பேரில் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சாராய வழக்கு உள்ளதா என்றால் இருக்கும். சின்னசாமிக்கு நான் பங்கு உரிமையாளர் என்றால் சரியல்ல. தாவா சொத்து சின்னசாமி அவரது மனைவி இந்திராணி மற்றும் அவரது பிள்ளைகள் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்து வாங்கியதாகும் என்றால் சரியல்ல. தனத்திற்கு நான் சொத்து ஏதும் விற்கவில்லை. தனம் எவ்வாறு சொத்து வாங்கினார் என்றாலும், யாரிடம் இருந்து வாங்கினார் என்று எனக்கு தெரியாது. சின்னசாமிக்கும் எனக்கும் எனது அம்மா பாகம் பிரித்து கொடுத்தார்கள்.

3. சொத்தை அளந்து தான் பாகம் பிரித்து கொண்டோம். பாகம் பிரிப்பதற்கு ஊர்காரர்கள் யாரும் இல்லை. பி.வா.சா.ஆ.1 சின்னசாமியை ஏமாற்றி எழுதி வாங்கிய ஆவணம் என்றால் சரியல்ல. செல்லாத பி.வாசா.ஆ.1 –ன் மூலம் பெற்ற 2,3 ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல. எனது அம்மா பெயரில் டி கார்டு பட்டா வழங்கியதாக கூறியுள்ளேன். மேற்படி பட்டாவை கொடுத்து தான் பட்டாவை மாற்றி பெற்றுக்கொண்டேன். தாவா சொத்திற்கு சின்னசாமி பெயரிலும் மற்ற சொத்துக்கும் எனது அம்மா பெயரில் டி கார்டு இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதியை யார் என்று எனக்கு தெரியாது. இந்திராணியை நான் பார்த்ததில்லை. எனது அம்மாவுடன் பிறந்த கோபால் என்பவர் எனக்கு தெரியாது. எனது அம்மாவுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது. இந்திராணியின் கணவர் யார் என்று எனக்கு தெரியாது. 1 முதல் 3 பிரதிவாதிகள் யார் என்று எனக்கு தெரியாது.

4. எனது தாய்மாமன் கோபால் மகள் வாதி இந்திராணி என்றாலும், 1 முதல் 3 பிரதிவாதிகள் எனது சகோதரர் சின்னசாமி, இந்திராணியின் பிள்ளைகள் என்றால் சரியல்ல. வாதி இந்திராணி, சின்னசாமி, 1 முதல் 3 பிரதிவாதகள் ஆகியோர்களின் சொத்தை ஏமாற்ற வேண்டி மோசடியாக நானும், சென்னையன், சிவக்குமார், தனம் ஆகியோர் பத்திரங்களை தயார் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரங்கள் செல்லாது என்றால் சரியல்ல.

**8ம் பிரதிவதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சின்னசாமி எனக்கு அண்ணன் முறை ஆக வேண்டும். எனது அண்ணார் சின்னசாமி தாவா சொத்தில் ஒரு பகுதியை தனத்திற்கு கிரையம் கொடுத்திருக்கிறார். என்னுடைய பாக சொத்தை யாருக்கும் கிரையம் கொடுக்கவில்லை. நானே வைத்திருக்கிறேன். தாவா சொத்தில் ஒரு பகுதியை தனத்திற்கு ஒரு பகுதியையும், சென்னையனுக்கு ஒரு பகுதியையும் எனது அண்ணன் சின்னசாமி கிரையம் கொடுத்திருக்கிறார். 8ம் பிரதிவாதி தனம் அவர் கிரையம் பெற்றதை அவர் சாகுபடி செய்து வருகிறார்.

சென்னையனுக்கு கிரையம் கொடுத்ததை அவர் சிவக்குமாருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார். தற்போது, அவர் தான் சாகுபடி செய்து வருகிறார். தனத்திற்கு கிரையம் கொடுத்து 17 வருடங்கள் ஆகிறது. வாதி இந்திராணிக்கு தாவா சொத்தில் சாகுபடி செய்வதற்கு எந்த ஆவணங்களும் கிடையாது. இந்திராணிக்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை. தாவா சொத்தில் வாதிக்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்று எனக்கு தெரியாது.

Sd/–S.ASSEEN BANU,
Sub Judge, Harur